Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 25/2021
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | கோபிநாதன் | Calling: | டிரைவர் |
| Father's Name/ Husband's Name: | விஸ்வநாதன் | Religion: | |
| Village: | குந்தானிமேடு | Age: | 38 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 09.04.2026 நேரம் : 12.40 AM

எ.த.சா.1 முதன்மை விசாரணையின் தொடர்ச்சி

எனது பெரியப்பா என் மீது வாணியம்பாடி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் நகல் தான் அது. **அந்த நகல் எ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சென்னை உயர்நீதிமன்றத்திலும் என் மீது என் தாத்தாவை நான் கொலை செய்து விட்டதாக என் மீது CBCID யில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதற்கான தீர்ப்பும் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் தீர்ப்பின் நகல் தான் அது. (எதிரிதரப்பில் தாக்கல் செய்த நகலை பரிசீலனை செய்து பார்த்தபோது அவர்கள் தாக்கல் செய்துள்ள நகலானது தீர்ப்பு குறித்த ஆவணம் அல்ல, மாறாக 482 CRPC கீழ் வேணு என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் நகல். இந்த வழக்கிற்கும் எதிரி சொன்ன விவரத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் நீதிமன்றம் அதை குறியீடு செய்யவில்லை. நிலத்தை ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டேன் என்று அறிவிப்பு வெளியிட்டு அதை அனைவருக்கும் சார்பு செய்தார். அதற்கான ஆவணமும் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் அது. **அந்த அறிவிப்பு எ.த.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் மீது

தாக்கல் செய்த கொலை வழக்கு சம்மந்தமாக CBCIDயிலிருந்து விசாரிக்க என்னை அழைத்தார்கள். அதற்கான அழைப்பாணையும் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அழைப்பாணை தான் அது. (அவர் எதிரி தரப்பில் தாக்கல் செய்த அழைப்பாணையை பரிசீலனை செய்து பார்த்ததில் வேணு என்பவர் தாக்கல் செய்த வழக்கில் எதிரியை சாட்சியாக விசாரணை செய்ய அழைப்பாணை வந்துள்ளதே தவிர எதிரியின் மீது அவர் சொல்வதுபோல் எந்த கொலை வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்பதால் அவர் சொல்வதற்கும் அவர் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் குறியீடு செய்யப்படவில்லை.) இந்த வழக்கும் நில சம்மந்தப்பட்ட பிரச்சனைக்காக தான் என் மீது கொடுத்துள்ளார். இதுமட்டுமல்லாமல் பலமுறை என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். நிலம் வேண்டும் என்பதற்காக தான் அவர் இவ்வாறு செய்கிறார். இவ்வழக்கிற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை, சண்டை நடக்கும் போது நான் அந்த இடத்தில் இல்லை.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரங்கள் அனைத்தும் எனக்கு மட்டுமே தெரிந்த சிறப்பான விசயமா என்றால் அனைவருக்கும் தெரியும். சண்டை நடந்தபோது நான் அங்கு இல்லை என்று எனது முதன்மை விசாரணையில் கூறியுள்ள நிலையில் சம்பவத்தின்போது எங்கு இருந்தேன் என்றால் வாணியம்பாடியில் வண்டி ஓட்டிக்கொண்டிருந்தேன். நான் அன்றைய தினம் வண்டி தான் ஓட்டிக்கொண்டிருந்தேன் என்பதற்கான ஆதாரங்களை சமர்பிக்க முடியாது என்றால் சரிதான். எந்த கடையில் என்ன வண்டி என்ன சரக்கை ஏற்றிக்கொண்டிருந்தேன் என்பதற்கான ஆதாரங்களை சமர்பிக்க முடியுமா என்றால் முடியாது. எ.த.சா.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அறிவிப்பானது நான் சொல்வது போல் வே1 என்பவரால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, அவர் தான் கொடுத்தார். அந்த அறிவிப்பில் அறிவிப்பு கொடுத்ததாக இப்படிக்கு என்ற இடத்தில் வெங்கடேசன், கங்காதரன் என்பவர்களின் பெயர்கள் தான் உள்ளது, வேணு என்பவரின் பெயர் இல்லை என்றால் சரிதான், அது அவருடைய அண்ணன். நான் தாக்கல் செய்துள்ள எ.த.சா.1 ஆவணத்தில் வேணு என்பவர் என் மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும், வாதி என்ற இடத்தில் வேணு என்பவரின் பெயர் இல்லை என்றாலும் சரிதான். மேற்படி அந்த வழக்கில் வேணு என்பவர் இரண்டாம்

பிரதிவாதியாகவும், நான் 5ம் பிரதிவாதியாகவும் உள்ளோம் என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் Crl.O.P. No.7869/2019, 25.03.2019 தேதியிட்ட தீர்ப்பு நகல் என்று நான் தாக்கல் செய்த ஆவணத்தில் பிரதிவாதி என்று நான் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் குற்ற எண், சட்டப்பிரிவுகள் போன்ற சங்கதிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 4 வாரத்தில் வழக்கின் புலன்விசாரணையை முடிக்க வேண்டும் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.த.சா.2 அறிவிப்பில் V.கோபி என குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்னைத்தான் என்றால் சரிதான். எ.த.சா.2 அறிவிப்பில் பெருமாள் கவுண்டரை ஏமாற்றி நான் பத்திரம் ஒன்றை தயார் செய்து கொண்டதாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது பொய், எ.த.சா.ஆ.2 அறிவிப்பினால் எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாக காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ அவதூறு வழக்கு அறிவிப்பு கொடுத்த 26.03.2018ம் தேதியிலிருந்து இன்றைய தேதி வரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எ.த.சா.ஆ.2 அறிவிப்பு பொய் என்றால் நான் கட்டாயமாக வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை, இதன்பின் தாக்கல் செய்வேன். இவ்வழக்கில் சாட்சிகள் அனைவரும் எனக்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர், அதனால் நான் வழக்கை காலதாமதம் செய்து வழக்கை நீட்டி இழுக்க வேண்டும் என்பதற்காக மனுவையும், மேற்படி சம்மந்தமில்லாத ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.நான் சம்பவ இடத்தில் இல்லை, வேறு எந்த இடத்தில் இருந்தேன் என்பதை நிரூபிப்பது இந்திய சாட்சிய சட்ட பிரிவு 11ன் படிக்கு என்னுடைய பொறுப்பு என்றால் சரிதான். இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தான் இவ்வாறு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் சம்பவ நேரத்தில் எங்கு இருந்தேன் என்பதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களே நான் தொடர்ந்து குற்றவியல் மற்றும் உரிமையியல் தவறுகளை செய்து வருகிறேன் என்பதற்கான ஆதாரமாக தான் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எதிராக கொலை வழக்கு உள்ளது என்று கூறிவிட்டு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து குழப்பத்தை உண்டுபண்ணி நாட்களை கடத்த வேண்டும் என்று தற்போது சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் அந்த வழக்கில் என்னை விசாரித்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் அதற்கான அழைப்பாணையை தாக்கல்

செய்துள்ளேன். அந்த அழைப்பாணையில் குற்ற எண், சட்டபிரிவுகள், கொலை வழக்கு என எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியமளிக்கிறேன் என்றாலும், உண்மைக்கு புறம்பான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் உரிமையியல் வழக்கின் பதிலுரையில் என் பெயரில் உள்ள பத்திரத்தை தாக்கல் செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கிஸ்து ரசீது மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். நான் ஏமாற்றி வாங்கியதால் தான் அந்த அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் மறுவிசாரணை

உரிமையியல் வழக்கில் தாக்கல் செய்த வழக்குரையில் தாக்கல் செய்ததால் நான் தனியாக பதிலுரை தாக்கல் செய்யவில்லை.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

பெருமாள் கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 26.08.2017. என் பெயரில் உள்ள தான செட்டில் மென்ட் தேதி 10.07.2017 என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அறிவிப்பில் குறிப்பாக என் தந்தை இறப்பிற்கு முன்பு பி.கோபி என்பவரின் பெயரில் பத்திரம் பதிவு செய்துக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கோபிநாதன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.04.11 15:11:17 +0530